
# முழங்கால் யுத்தம்

## "பிரார்த்தனை வேளை"

### (குடும்ப ஆசீர்வாதங்களுக்காக)



L.ஜோசப்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# முழங்கால் யுத்தம்

## "பிரார்த்தனை வேளை"

### (குடும்ப ஆசீர்வாதங்களுக்காக)

*"கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிற நான்... பாக்கியவான்"*
*(சங்கீதம் 128:1)*



தேவ ஊழியன்
L. ஜோசப்

## உங்களோடு...

''நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' (ஆதி 12:2)

**நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற கிருபையால் **''முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை வேளை''** (*குடும்ப ஆசீர் வாதங்களுக்காக*) என்ற இந்த சிறிய ஜெபக்கையேட்டை வெளியிட்டுள்ளோம்!

இயேசுகிறிஸ்துவை அறிந்தோர் மற்றும் அவரை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டோர் தங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காக இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிப்பதற்கென்று இதனை ஆயத்தப்படுத்தியுள்ளோம்! குடும்ப ஆசீர்வாதங்களுக்காக எப்படி? ஜெபிக்க வேண்டுமென்று தெரியாதவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்!

இந்த ஜெபக்கையேட்டின் மூலம் குடும்பத் தலைவர்கள், குடும்பத் தலைவிகள், வாலிப பிள்ளைகள், சிறுப்பிள்ளைகள் தங்கள் குடும்பத்திற்காகவும் மற்றும் தனிப்பட்ட ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிக்கலாம்!

**''கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்வித மாய் ஆசீர்வதிக்கப்படுவான்'' (சங் 128:4)** என்ற வசனத்தின்படி இயேசுகிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள மாதிரி ஜெபங்களை கொடுத்துள்ளோம்! இயேசுகிறிஸ்துவிடத்தில் ஸ்தோத்திர பலிகளைச் சொல்லி, குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்கேற்ப இந்த ஜெபங்களை தேவசமுகத்தில் தினமும் ஏறெடுக்கும்பொழுது, நீங்கள் உண்மையாகவே ஆசீர்வாதங்களை பெறமுடியும்!

**இயேசுகிறிஸ்து உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!**

**அன்பும்! ஜெபமும்!!** L. ஜோசப்

**''ஜெபத்தைக் கேட்கிறவரே...''**
**''ஜெபத்தை ஏற்றுக்கொள்பவரே...''**
**(சங் 65:2; 6:9)**

## ஜெபத்தலைப்புகள்!

1. காலை குடும்ப ஜெபம்! ... 8
2. இரவு குடும்ப ஜெபம்! ... 10
3. பேரப் பிள்ளைகளுக்காக! ... 12
4. வாலிபப் பிள்ளைகளுக்காக! ... 14
5. பிறந்த நாளுக்கான ஜெபம்! ... 16
6. திருமண நாளுக்கான ஜெபம்! ... 19
7. குழந்தை பாக்கியத்திற்காக! ... 22
8. பிள்ளைகளின் திருமணத்திற்காக! ... 24
9. குடும்பத்தின் இரட்சிப்பிற்காக! ... 26
10. குடும்ப சமாதானத்திற்காக! ... 28
11. குடும்ப ஆசீர்வாதத்திற்காக! ... 30
12. ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்காக! ... 32
13. பதவியிலுள்ளவர்களுக்காக! ... 34
14. பணிபுரியும் நிறுவனத்திற்காக! ... 36
15. புதிய வீடு கட்டப்பட! ... 38
16. தொழில் செய்வோருக்காக! ... 40

## ஜெபத்தைக் கேட்கிற இயேசு...

**''ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்'' (சங் 65:2)**

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஜெபத்தின் சத்தத்தைக் கேட்கிறவர்'' (சங் 66:19)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஜெபத்திற்கு செவி கொடுக்கிறவர்'' (சங் 20:1)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஜெபத்தைத் தள்ளாதவர்'' (சங் 66:20)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்'' (சங் 6:9)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஜெபத்திற்கு உடனே பதில் கொடுக்கிறவர்'' (சங் 138:3)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''ஆபத்து நாளில் ஜெபத்தைக் கேட்கிறவர்'' (சங் 20:1)

※ ***இயேசுகிறிஸ்து:*** ''நெருக்கமான சூழ்நிலையில் ஜெபத்தைக் கேட்கிறவர்'' (சங் 4:1)

## தேவனைத் துதிப்போம்!

''இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாருக்கிற தேவரீரே பரிசுத்தர்'' (சங் 22:3)

※ துதிக்குப் பாத்திரரே! ஸ்தோத்திரம்!!

※ சகலத்தையும் செய்ய வல்லவரே! ''

※ அநாதிகாலமாய் இருப்பவரே! ''

※ இராஜாதி இராஜாவே! ''

※ கர்த்தாதி கர்த்தரே! ''

※ மன்னாதி மன்னவரே! ''

※ தேவாதி தேவனே! ''

※ அதிசயமானவரே! ''

※ ஆலோசனைக் கர்த்தரே! ''

※ வல்லமையுள்ள தேவனே! ''

※ நித்தியப் பிதாவே! ''

※ சமாதானப் பிரபுவே! ''

※ மகிமைப் பொருந்தியவரே! ''

※ மனதுருகுகிற கர்த்தரே! ''



※ கண்ணீரைத் துடைக்கிறவரே! ''

※ சமாதானத்தைத் தருகிறவரே! ''

※ ஜெயங்கொடுக்கிறவரே! ''

※ மிகுந்த தயவுள்ளவரே! ''

※ நித்திய வெளிச்சமானவரே! ''

※ ஏழைக்குப் பெலனானவரே! ''

※ எளியவனுக்கு திடனானவரே! ''

※ உயர்ந்த அடைக்கலமானவரே! ''

※ ஆபத்தில் அனுகூலமானவரே! ''

※ எங்களைப் பாதுகாக்கிறவரே! ''

※ எங்களை கைவிடாதவரே! ''

※ தாயைப்போல் தேற்றுகிறவரே! ''

※ எங்களை ஆறுதல்படுத்துகிறவரே! ''

※ கிருபையும், இரக்கமுள்ளவரே! ''

※ ஆறுதலும், இரட்சிப்புமானவரே! ''

※ எங்களை ஆசீர்வதிக்கிறவரே! ''

**''துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது''**
**(சங் 147:1)**

## காலை குடும்ப ஜெபம்!

**''கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்'' (சங் 5:3)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! இந்த காலை நேரத்திலும் குடும்பமாக உமது பாதத்திலே வரும்படி நீர் கொடுத்த கிருபைக்காக உமக்கு நன்றி! கடந்த நாளிலும் எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கையிட்டுச் செய்த எல்லா வேலைகளையும் ஆசீர்வதித்தீரே! கண்மணியைப் போல் பாதுகாத்தீரே! கரம் பிடித்து நடத்தினீரே! உமக்கு நன்றி!

ஆண்டவரே! நீர் கொடுத்த இந்த புதிய நாளிலும் எங்களை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறேன்! இந்த நாள் முழுவதும் உமது விருப்பத்தின்படி எங்களை ஆட்கொண்டு வழிநடத்தும்! நாங்கள் நடக்க வேண்டிய



வழியை எங்களுக்கு காண்பியும்! நாங்கள் ஒவ்வொருவரும் கையிட்டுச் செய்யும் எல்லா வேலைகளையும் ஆசீர்வதியும்! எங்களை உம்முடைய ஞானத்தினாலும், புத்தியினாலும், அறிவினாலும் நிரப்பும்!

இயேசுவே! சுகத்தையும், பெலத்தையும், ஆரோக்கியத்தையும் தாரும்! எங்களுக்கு உம்முடைய ஆலோசனையும், தெய்வீக பாதுகாப்பும் உண்டாகட்டும்! சாத்தானின் வல்லமைகள் விலகட்டும்! ஆண்டவரே! உமது முகத்தை எங்கள் ஒவ்வொருவர் மேலும் பிரகாசிக்கப்பண்ணும்! உமது சமாதானத்தினால் எங்களை நிரப்பும்! இயேசுவே! நீர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் ஜெபிக்கிறேன்! பரம பிதாவே! ஆமென்!***

**''அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்'' (நீதி 8:17)**

## இரவு குடும்ப ஜெபம்!

**"இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவது மில்லை தூங்குகிறதுமில்லை" (சங் 121:4)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! இந்த இரவு நேரத்திலும் குடும்பமாக உமது பாதத்திலே வருகிறோம்! காலையிலிருந்து இந்நேரம் வரையிலும் எங்கள் வாழ்க்கையில் உமது விருப்பத்தை நிறைவேற்றினீரே! நாங்கள் செய்த எல்லா வேலைகளையும் ஆசீர்வதித்தீரே! நல்ல சுகத்தையும், பெலத்தையும் தந்தீரே! எல்லாவித தீங்குகளுக்கும் விலக்கிப் பாதுகாத்தீரே! இந்த நாள் முழுவதும் நீர் எங்களுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம்!

இயேசுவே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது கரங்களில் அர்ப்பணிக்கிறோம்! இந்த நாளிலும் நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த எல்லாப் பாவங்களையும் மன்னியும்! இயேசுவே! உமது இரத்தத்தால் கழுவும்!

ஆண்டவரே! இந்த இரவு நேரம் முழுவதும் எங்கள் ஒவ்வொருவருக்கும் உம்முடைய தெய்வீகப் பாதுகாப்பு உண்டாகட்டும்! கெட்ட சொப்பனங்களோ, தீயசிந்தனைகளோ வராதபடிக்கு, சாத்தானின் தந்திரங்களுக்கு எங்களை விலக்கியருளும்! சுகமான நித்திரையைத் தாரும்! இயேசுவே! எங்களை உமது இரத்தத்தில் மறைக்கிறோம்! வீட்டைச் சுற்றிலும் வேலியடையும்! நாளை காலையில் எழுந்து உமது பாதத்தில் வர உதவி செய்யும்! இயேசுவே! நீர் எங்களைப் பாதுகாப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**"கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; வாதை உன் கூடாரத்தை அணுகாது" (சங் 121:7; 91:10)**

## பேரப் பிள்ளைகளுக்காக ஜெபம்!

''பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்'' (நீதி 17:6)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

ஆண்டவரே! நீர் எங்களுக்கு கொடுத்த நல்ல பேரப் பிள்ளைகளுக்காக உமக்கு நன்றி! நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் என்று சொன்னவரே! என் அன்பு பிள்ளைகளை உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன்!

இயேசுவே! நீர் இவர்களை ஆசீர்வதித்து உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றும்! சாமுவேலோடு பேசினவரே! என் அன்பு பிள்ளைகளோடு தினமும் பேசும்! நீரே இவர்களுக்குப் போதித்து, நடக்க வேண்டிய வழியை காண்பித்தருளும்! சாலமோனைப் போல உமது தெய்வீக ஞானத்தினால், அறிவினால், புத்தியினால் நிரப்பும்!



பரிசுத்தத்திலும், கிருபையிலும், வளர்ந்து பெருகட்டும்! உமக்கு பயப்படுகிற பயம் உண்டாகட்டும்! கீழ்ப்படிகிற பிள்ளைகளாக வளரட்டும்! படிப்பில் மேன்மையைக் கட்டளையிடும்! இவர்கள் கையிட்டுச் செய்யும் வேலைகளை ஆசீர்வதியும்!

இயேசுவே! என் அன்பு பிள்ளைகளுக்கு நல்ல சுகத்தையும், பெலத்தையும் தாரும்! உமது தெய்வீக பாதுகாப்பு உண்டாகட்டும்! இவர்கள் வாழ்ந்து சுகமாய் இருக்கட்டும்! எல்லாருக்கும் ஆசீர்வாதமாக இருக்கட்டும்! இவர்கள்மேல் உம்முடைய ஆசீர்வாதத்தை அளவில்லாமல் ஊற்றும்! சத்துருவின் வல்லமைகள் விலகட்டும்! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பேரப்பிள்ளைகளை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே'' (நீதி 17:6)*

## வாலிபப் பிள்ளைகளுக்காக ஜெபம்!

**''வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்'' (சங் 127:5)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! நீர் எங்களுக்கு கொடுத்த வாலிபப் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன்! இவர்களை உம்முடைய பரிசுத்தமுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! இயேசுவே! இந்த நாளிலும் உமது விருப்பத்தின்படி கரம்பிடித்து நடத்தும்படி ஜெபிக்கிறேன்!

ஆண்டவரே! இவர்கள் தங்கள் வாலிபப் பிராயத்திலே உம்மை அதிகமாய் துதிக்க, ஆராதிக்க, ஜெபிக்க கிருபை தாரும்! அனுதினமும் உமது பாதத்தைத் தேட, வேதத்தை வாசிக்க, தியானிக்க உதவி செய்யும்! இயேசுவே! இவர்கள் உமது வார்த்தைகளுக்கு கீழ்ப்படியட்டும்! உமது வசனங்களின்படி நடக்க கிருபை செய்யும்! துணிகரமான பாவங்களுக்கு விலக்கி



காத்தருளும்! தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள அருள்புரியும்! கெட்ட நண்பர்களுடைய பழக்கம் இல்லாதபடி பாதுகாத்தருளும்! இயேசுவே! உமது பரிசுத்தத்தினால் நிரப்பும்! தரிசனங்கள், சொப்பனங்கள் மூலம் இவர்களோடு பேசும்!

இயேசுவே! பிள்ளைகளுக்கு படிப்பில் மேன்மையைத் தாரும்! உமது ஞானத்தினால், அறிவினால், சாமர்த்தியத்தினால் நிரப்பும்! மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான பிள்ளைகளாக இருக்கட்டும்! தெய்வீகப் பாதுகாப்பு உண்டாகட்டும்! சாத்தானின் வல்லமைகள் விலகட்டும்! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு வாலிபப்பிள்ளைகளை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''வாலிபருக்கு... தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்'' (தானி 1:17)**

## பிறந்த நாளுக்கான ஜெபம்!

**"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்" (சங் 65:11)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! இந்த ......-வது பிறந்த நாளை காணச்செய்த கிருபைக்காக உமக்கு நன்றி! கடந்த வருடம் முழுவதும் என்னை *(என் மகனை / மகளை / பேரப்பிள்ளையை)* ஆசீர்வதித்தீரே! கண்மணியைப் போல பாதுகாத்தீரே! கரம் பிடித்து நடத்தினீரே! நல்ல சுகத்தையும்; பெலத்தையும், ஜீவனையும் தந்தீரே! உமது நன்மையால் நிரப்பி ஆசீர்வதித்தீரே! உமக்கு நன்றி!

இயேசுவே! இந்த ......-வது பிறந்த நாளை கொண்டாடுகிற என்னை ஆசீர்வதியும்! என்னை உமது பரிசுத்தமுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! இந்த வருடம் முழுவதும் உமது விருப்பத்தின்படி என்னை கரம்



பிடித்து நடத்தும்! நல்ல சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தாரும்! உமக்குப் பிரியமாய் நடக்க உதவியருளும்! எனக்கு துணை நின்று என்னை பாதுகாத்தருளும்!

இயேசுவே! என்னை யோசேப்பைப் போல பரிசுத்தத்தினால் நிரப்பும்! தானியேலைப் போல ஞானத்தினால் நிரப்பும்! பவுலைப் போல வல்லமையினால் நிரப்பும்! ஆண்டவரே! நான் கையிட்டுச் செய்யும் எல்லா வேலைகளையும் ஆசீர்வதித்து, என்னை மேன்மைப்படுத்தி உயர்த்தும்! சாத்தானின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**"எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்" (உபா 26:19)**

## பிறந்த நாளுக்கான தியானப்பகுதி!

**(சங்கீதம்: 65)**

1. ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.
2. உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.
3. வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.
4. வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது; மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது.
5. மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது; அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது.



## திருமண நாளுக்கான ஜெபம்!

**"இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன்... ஆசீர்வதிக்கப்படுவான்" (சங் 128:1)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! இந்த ......-வது திருமண நாளை காணச்செய்த கிருபைக்காக உமக்கு நன்றி! கடந்த வருடம் முழுவதும் எங்களை ***(என் மகனை / மகளை / பேரப்பிள்ளையை)*** ஆசீர்வதித்து உயர்த்தினீரே! கண்மணியைப் போல் பாதுகாத்தீரே! கையிட்டுச் செய்த வேலைகளை ஆசீர்வதித்தீரே! நல்ல சுகத்தை, பெலத்தை தந்தீரே! குழந்தைப் பாக்கியத்தை தந்தீரே! மேன்மைப்படுத்தி உயர்த்தினீரே! உமக்கு நன்றி!

இயேசுவே! இந்த......-வது திருமண நாளை கொண்டாடுகிற எங்களை ஆசீர்வதியும்! எங்களை உமது பரிசுத்தமான கரங்களில் ஒப்புவிக்கிறோம்! நீர் எங்களுக்குப்

போதித்து, நடக்க வேண்டிய வழியை காண்பியும்! வருஷத்தை நன்மையால் முடிசூட்டும்! உமது விருப்பத்தை எங்கள் வாழ்விலே நிறைவேற்றும்! ஆண்டவரே! பாக்கியமும், நன்மையும் உண்டாகட்டும்!

இயேசுவே! நாங்கள் கையிட்டுச் செய்யும் வேலைகளை ஆசீர்வதியும்! உம்முடைய ஞானத்தினால், வல்லமையினால் நிரப்பும்! நல்ல சுகத்தை, பெலத்தை, ஜீவனைத் தாரும்! இயேசுவே! உமது சமாதானத்தினால், சந்தோஷத்தினால் நிரப்பும்! உமது பரிபூரண ஆசீர்வாதத்தினால் நிரப்பும்! தெய்வீகப் பாதுகாப்பு உண்டாகட்டும்! சாத்தானின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்'' (சங் 115:13)**



## திருமண நாளுக்கான தியானப்பகுதி!

**(சங்கீதம்: 128)**

1. கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.
2. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.
3. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.
4. இதோ, கர்த்தருக்குப்பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.
5. கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.
6. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

## குழந்தை பாக்கியத்திற்காக ஜெபம்!

**''மலடியைச் சந்தோஷமான பிள்ளைத் தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார்'' (சங் 113:9)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! எனக்கு கிருபையாய் மனமிரங்கி குழந்தைப் பாக்கியத்தைத் தரும்படி ஜெபிக்கிறேன்! இயேசுவாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்ற வசனத்தின்படி எனக்கு குழந்தை பாக்கியத்தைத் தர உம்மால் ஆகும் என்று நம்புகிறேன்! இயேசுவே! என் கண்ணீரின் ஜெபத்திற்கு பதில் தாரும்!

ஆண்டவரே! பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி உம்மால் கிடைக்கும் பலன் என்ற வசனத்தின்படி என்னை ஆசீர்வதியும்! உன் பிள்ளைகள்



உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள் என்ற வாக்குத்தத்த வசனத்தை என்னுடைய வாழ்க்கையிலும் நிறைவேற்றும்!

குழந்தை இல்லாத குறையை நிறை வாக்குகிற ஆண்டவரே! (சங் 113:9) என்மேல் இரக்கம் வைத்து ஒரு அற்புதம் செய்தருளும்! என் கண்ணீரைத் துடைத்து, நிந்தையை அகற்றும்! உமது வல்லமையினால் என்னை நிரப்பி ஆசீர்வதியும்! இயேசுவே! என்னை ஆசீர்வதித்து உமது நாமத்தை மகிமைப்படுத்தும்! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எனக்கு குழந்தை பாக்கியத்தைத் தந்து என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்'' (சங் 128:6)**

## பிள்ளைகளின் திருமணத்திற்காக ஜெபம்!

**''மனுஷன் (மனுஷி) தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு (அவளுக்கு) உண்டாக்குவேன்'' (ஆதி 2:18)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்து முடிக்கிற அன்பின் ஆண்டவரே! என்னுடைய (*மகன் / மகள் / பேரப்பிள்ளை* பெயர்: ..........................................) திருமண வாழ்க்கைக்காக ஜெபிக்கிறேன்! இயேசுவே! உம்மேல் முழு நம்பிக்கை வைத்துள்ளேன்! உமது விருப்பத்திற்கு என்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறேன்!

இயேசுவே! எனக்கு நல்ல ஒரு வாழ்க்கை துணையை தெரிந்தெடுத்து, திருமணத்தை நடத்தி ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறேன்!



ஏற்ற துணையை உண்டாக்குகிறவரே! கிருபையாய் மனமிரங்கி என்னை ஆசீர்வதியும்! என் கண்ணீரைத் துடைத்து, நிந்தையை நீக்கும்! சகலவித நன்மைகளினால் ஆசீர்வதிக்கிறவரே! என்னை உம்முடைய விருப்பத்தின்படி திட்டமும், தெளிவுமாய் நடத்தும்! என் திருமண காரியங்களைக் கைக்கூடிவரப் பண்ணும்! சகலத்தையும் நன்மையாகச் செய்து முடிக்கும் இயேசுவே! சாத்தானால் வரும் தடைகளை மாற்றும்! திருமணத்திற்கான எல்லாப் பணத்தேவைகளையும் சந்தியும்! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு ஏற்ற துணையை தந்து என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயவையும் பெற்றுக்கொள்ளுகிறான்'' (நீதி 18:22)**

# குடும்பத்தின் இரட்சிப்பிற்காக ஜெபம்!

**"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை" (ஏசா 59:1)**

*பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!*

இயேசுவே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! இவர்கள் ஒவ்வொருவரையும் நீர் இரட்சிக்கும்படி ஜெபிக்கிறேன்! உமது விலையேறப்பெற்ற இரட்சிப்பை எனக்குத் தந்தவரே! எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட விரும்புகிறவரே! எங்கள் குடும்பத்தையும் இரட்சியும்!

இயேசுவே! இரட்சிப்பு உம்முடையது! கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்ற வசனத்தின்படி கிருபையாய் மனமிரங்கி இரட்சிப்பை அருளிச் செய்யும்! பாவிகளை இரட்சிக்க வந்த இயேசுவே! நீரே இரட்சகரென்று இவர்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள கிருபை தாரும்! சிலுவையில் எங்களுக்காக இரத்தத்தைச் சிந்தினவரே! இவர்கள் ஒவ்வொருவருடைய பாவங்களையும் உமது இரத்தத்தினால் கழுவியருளும்! பாவங்களிலிருந்து, சாபங்களிலிருந்து, கட்டுகளிலிருந்து விடுதலையைத் தாரும்!

இயேசுவே! நீர் அருளும் இரட்சிப்பின் சந்தோஷத்தை, சமாதானத்தை இவர்கள் பெற்றுக் கொள்ளட்டும்! கடைசி வரைக்கும் இரட்சிப்பில் நிலைத்திருக்க உதவிசெய்யும்! தடைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எங்க்கள் குடும்பத்தை இரட்சிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப் 16:31)**

## குடும்ப சமாதானத்திற்காக ஜெபம்!

**"கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்" (சங் 29:11)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! இயேசுவே! எங்கள் குடும்பத்தின் சமாதானத்திற்காக உமது சமுகத்தில் ஜெபிக்கிறேன்! சமாதானமாயிருக்கும்படி எங்களை அழைத்தவரே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது வழியிலே நடத்துவீராக!

என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன் என்ற இயேசுவே! எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தினால் எங்கள் ஒவ்வொருவரையும் நிரப்பும்! சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சமாதானத்தை உண்டு பண்ணினவரே! எங்கள் இருதயங்களை உம்முடைய



சமாதானத்தினால் நிரப்பும்! எல்லா மனுஷரோடும் சமாதானமாக இருக்க உதவி செய்யும்! எங்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களை நேசிக்க கிருபை தாரும்!

ஆண்டவரே! எங்கள் குடும்பத்தில் உமது சமாதானத்தைக் கட்டளையிடும்! நாங்கள் எப்பொழுதும் சமாதானத்தை நாடுகிறவர்களாக இருக்க கிருபை செய்யும்! இயேசுவே! உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உமது சமாதானத்தினால் நிரப்பும்! எங்கள் குடும்பத்தில் சமாதானக்குறைவை உண்டுபண்ணும் பிரிவினையின் ஆவிகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எங்கள் குடும்பத்தை உமது சமாதானத்தினால் நிரப்பி ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு" (சங் 119:165)**

## குடும்ப ஆசீர்வாதத்திற்காக ஜெபம்!

**''நான், உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்'' (ஆதி 12:2)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! இயேசுவே! எங்கள் குடும்பத்தை நீர் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறேன்! நீதிமானுடைய சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும் என்ற வேத வசனத்தின்படி எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரின்மேலும் உம்முடைய ஆசீர்வாதம் தங்குவதாக!

ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தவரே! நாங்கள் செய்யும் எல்லா வேலைகளிலும், தொழிலிலும் உமது ஆசீர்வாதம் உண்டாகட்டும்! எங்களை வாலாக்காமல் தலையாக்கும்! கீழாகாமல் மேலாக்கும்! உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்றவரே! உம்முடைய ஆசீர்வாதத்தை எங்களுக்கும், எங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கட்டளையிடும்!

இயேசுவே! உம்முடைய ஆசீர்வாதமே எங்களுக்கு ஐசுவரியத்தைத் தருவதாக! உமது நன்மையும், கிருபையும் எங்களை தொடரட்டும்! செல்வத்தையும், கனத்தையும் தரும் இயேசுவே! எங்கள் குறைவுகளை நிறைவாக்கி, உமது கரத்தினால் எங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து உயர்த்தும்! பூமிக்குரிய சகல ஆசீர்வாதத்தினால் நிரப்பும்! எங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதத்தை தடைபண்ணும் சாத்தானின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எங்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக'' (சங் 3:8)**

## ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்காக ஜெபம்!

**''ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1:3)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உமது கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! எங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக உமது சமுகத்தில் ஜெபிக்கிறேன்! இயேசுவே! உமது அன்பு எங்கள் இருதயங்களில் அளவில்லாமல் ஊற்றப்படுவதாக! உமது விருப்பத்தை அறிந்திட உதவி செய்யும்! ஆவியினாலே உம்மை துதிக்க, ஆராதிக்க, ஜெபிக்க எங்களுக்கு கிருபை தாரும்!

ஆண்டவரே! ஆவியோடும், உண்மையோடும் உம்மைத் தொழுதுகொள்ள கிருபை செய்யும்! எங்கள் உள்ளங்களில் உம்முடைய ஆவியை கட்டளையிடும்!



எங்களை உற்சாகமான ஆவியினால் நிரப்பும்! எங்களுடைய ஆவிக்குரிய மனுஷனைப் பலப்படுத்தும்! இயேசுவே! உம்முடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் அறிய உதவி செய்யும்!

ஆண்டவரே! இன்னும் உம்மை நெருங்கிச் சேர அருள்புரியும்! இயேசுவே! உமது நற்குணங்களால், பண்புகளால் நிரப்பும்! ஆவியின் கனிகளாலும், வரங்களாலும், அபிஷேகத்தாலும் நிரப்பும்! இயேசுவே! உமக்கு ஊழியஞ்செய்ய உதவிடும்! மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றும்! சத்துருவின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எங்கள் குடும்பத்தை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினால் நிரப்புவதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''ஆவியானவர் தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்'' (Iகொரி 12:11)**

## பதவியிலுள்ளவர்களுக்காக ஜெபம்!

**''தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்'' (தானி 1:17)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! நீர் கொடுத்த இந்த உயர் பதவிக்காக உமக்கு நன்றி! நான் பணிபுரியும் நிறுவனத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம்! செல்வமும், கனமும் உம்மாலே வருகிறது! இயேசுவே! உம்முடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட இந்த மேன்மைக்காக உம்மைத் துதிக்கிறேன்! என்னை ஆசீர் வதித்து உயர்த்தினவரே! உமக்கு நன்றி!

ஆண்டவரே! இந்த நாளிலும் என்னுடைய எல்லா வேலைகளையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறேன்! கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த இடத்தில் வைக்கப்படுவான் என்ற



வசனத்தின்படி என்னை ஆசீர்வதியும்! ஆண்டவரே! இந்த நாளிலும் நீர் எனக்குப் போதியும்! உமது ஞானத்தையும், தெய்வீக ஆலோசனையையும் எனக்குத் தாரும்!

ஆண்டவரே! எனக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை உணர்ந்து திறம்பட பணிபுரிய கிருபை தாரும்! உண்மையாக இருக்க, நேர்மையாக நடக்க உதவி செய்யும்! இயேசுவே! என்னுடன் பணிபுரியும் ஊழியர்களோடு ஒத்துழைக்க, இணைந்து செயல்பட, அநேகருக்கு உதவி செய்ய அருள்புரியும்! இயேசுவே! உம்முடைய கரத்தினால் பாதுகாப்பீராக! சாத்தானின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை ஆசீர்வதித்து உயர்த்துவதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்'' (சங் 115:13)**

## பணிபுரியும் நிறுவனத்திற்காக ஜெபம்!

**''நீ கைபிட்டுச் செய்யும் வேலைகளை யெல்லாம் ஆசீர்வதிக்கவும்...'' (உபா 28:12)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! நீர் கொடுத்த இந்த ........................ தொழில் நிறுவனத்திற்காக, நல்ல வேலைக்காக உமக்கு நன்றி! இயேசுவே! நான் கையிட்டுச் செய்யும் எல்லா வேலையிலும் ஆசீர்வாதத்தைத் தருபவரே! இந்த நாளிலும் உம்மிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட இந்த வேலையில் என்னை ஆசீர்வதித்து உயர்த்தும்படி ஜெபிக்கிறேன்!

இயேசுவே! இந்த நாள் முழுவதும் வேலையைச் செய்ய உமது தெய்வீக ஞானத்தினாலும், ஆலோசனையினாலும், உண்மையினாலும் என்னை நிரப்பும்! உமது பாதுகாப்பு உண்டாகட்டும்!



ஆண்டவரே! நான் வேலை செய்யும் நிறுவனத்தை ஆசீர்வதியும்! இந்நிறுவன அதிபரை ஆசீர்வதியும்! ஆண்டவரே! நிர்வாகத்தை நடத்த உமது ஞானத்தினால், ஆலோசனையினால் நிரப்பும்! நல்ல நிர்வாகத் திறமையைக் கொடுப்பீராக! இந்நிறுவனம் வளர்ந்து பெருகட்டும்! இதன் எல்லாத் தேவைகளையும் சந்தியும்!

இயேசுவே! இந்நிறுவனத்தில் பணிபுரியும் எல்லா ஊழியர்களையும் ஆசீர்வதியும்! அவர்களை உமது ஞானத்தினால் நிரப்பும்! இந்த நிறுவனத்தின் எல்லைகளில் உமது பாதுகாப்பு உண்டாகட்டும்! சத்துருவின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எங்கள் நிறுவனத்தை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜெபம் கேளும் நல்ல பிதாவே! ஆமென்!***

**''கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்கு வார், நீ கீழாகாமல் மேலாவாய்'' (உபா 28:14)**

## புதிய வீடு கட்டப்பட ஜெபம்!

''தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி...'' (சங் 68:6)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

ஆண்டவரே! எங்களை உமது கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! எங்களுக்கு ஒரு நல்ல வீட்டை கட்டித்தரும்படி ஜெபிக்கிறேன்! வீடுவாசல் இல்லாதவர்களுக்கு வீடுவாசல்களை ஏற்படுத்துகிறவரே! நாங்கள் நல்ல வீட்டைக் கட்டி குடியிருக்க கிருபை தாரும்!

எங்கள் தேவைகளை அறிந்திருக்கிற இயேசுவே! இப்பொழுதும் நாங்கள் ஏறெடுக்கும் ஜெபத்தைக்கேட்டு உமது விருப்பத்தின்படி உதவி செய்யும்! எங்களுக்கு நல்ல ஒரு இடத்தை சொந்தமாக வாங்க கிருபை செய்யும்! அந்த இடத்திலே ஒரு நல்ல வீட்டைக் கட்டி முடிக்க கிருபை தாரும்! எங்கள் குறைவுகளை நிறைவாக்குகிற இயேசுவே! நல்ல இடத்தை வாங்க, வீட்டைக் கட்டுவதற்கான எல்லாப் பொருளாதாரத் தேவைகளையும் சந்தித்தருளும்! எங்களுக்கு உதவி செய்பவர்களை ஏற்படுத்தித் தாரும்!

தடைகளை நீக்கிப் போடும் இயேசுவே! இதற்கான எல்லா வழிவாசல்களையும் நீர் ஏற்ற வேளையிலே திறந்தருளும்! ஆண்டவரே! எல்லாக் காரியங்களையும் சீக்கிரத்திலே கைக்கூடி வரப்பண்ணுவீராக! எங்களை நன்மைகளால் ஆசீர்வதிப்பவரே! வீடுவாசலைத் தந்து எங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவீராக! சாத்தானால் வரும் தடைகளை நீக்கும்! இயேசுவே! நீர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு எங்களுக்கு நல்ல ஒரு வீட்டைக் கொடுத்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

**இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!**

''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா'' (சங் 127:1)

## தொழில் செய்வோருக்காக ஜெபம்!

**''கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்'' (உபா 28:8)**

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

ஆண்டவரே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! இயேசுவே! நீர் கொடுத்த இந்த நல்ல தொழிலுக்காக உமக்கு நன்றி! கடந்த நாளிலும் தொழிலின் எல்லைகளை ஆசீர் வதித்து விரிவுபடுத்தினீரே! உமக்கு நன்றி!

ஆண்டவரே! செல்வமும், கனமும் உம்மாலே வருகிறது! இந்த நாளிலும் தொழிலை ஆசீர்வதிக்கும்படி உம்மை நோக்கி ஜெபிக்கிறேன்! உம்முடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்ற வசனத்தின்படி தொழிலை ஆசீர்வதியும்! தொழிலின் எல்லைகள் விரிவாகட்டும்! வளர்ந்து பெருகட்டும்! செல்வத்தை



சம்பாதிக்க பெலனை தரும் இயேசுவே! நீர் என்னைக் கரம் பிடித்து நடத்துவீராக! தொழிலை திறம்பட செய்ய உம்முடைய ஞானத்தினால், அறிவினால் நிரப்பும்! நல்ல நிர்வாகத் திறமையைத் தாரும்!

குறைவுகளை நிறைவாக்கும் இயேசுவே! பணத்தேவைகளை சந்தியும்! உடன் பணி புரிபவர்களோடு சேர்ந்து உழைக்க உதவி செய்யும்! அவர்களையும் ஆசீர்வதியும்! எங்களைப் பாதுகாத்தருளும்! இந்த தொழில் மூலம் அநேகரை ஆசீர்வதியும்! உமது ஊழியத்தைத் தாங்க கிருபை தாரும்! தொழிலுக்கு விரோதமாக எழும்பும் சாத்தானின் வல்லமைகள் விலகுவதாக! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு தொழிலை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

**''நீ பட்டணத்திலும்... வெளியிலும்... ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய்'' (உபா 28:3)**

## தியானப் பகுதி!

(சங்கீதம்: 138)

1. உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

2. உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

3. நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்.

4. கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக்



கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.

5. கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.

6. கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

7. நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.

8. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

## பிரார்த்தனையைக் கேட்கும் இயேசு!

**''ஏழைகளின் ஜெபத்தை ஆண்டவர் கேட்டருளுகின்றார்'' (சங் 68:33)**

※ ''என்னை (இயேசுவை) நோக்கிக் கூப்பிடு; நாம் உனக்குச் செவி சாய்ப்போம்'' (எரெமி 33:3)

※ ''இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் எதிரிகளிடமிருந்து காக்கப் பெறுவேன்'' (IIசாமு 22:4)

※ ''என்னை (இயேசு) நோக்கிக் கூப்பிடுவான் அவன் ஜெபத்தைக் கேட்பேன்; துன்ப வேளையில் அவனோடு இருப்பேன்; அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன்'' (சங் 90:15)

※ ''இயேசுவை நோக்கி எந்நேரத்தில் கூவியழைத்தாலும் என் எதிரிகள் பின்னடைந்து போவர்: இயேசு என் சார்பாய் உள்ளார்; இதை நான் நன்கறிவேன்'' (சங் 55:9)



※ ''இயேசுவினிடத்தில் உன் இன்பத்தைத் தேடு; அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார்'' (சங் 36:4)

※ ''நீதிமான்கள் (நாங்கள்) கூக்குரலிட்டனர்; ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்: எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்''(சங் 33:17)

※ ''இயேசுவினிடத்தில் நீ கேட்ட மன்றாட்டை அவர் உனக்குத் தந்தருள்வார்'' (சாமு 1:17)

※ ''இயேசுவைக் கூவியழைக்கும் யாவருக்கும் அவர் அண்மையில் உள்ளார்'' (சங் 144:18)

※ ''இயேசுவைக் கூவியழைக்கிற யாவருக்கும் அவர் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்'' (சங் 85:5)

※ ''என் (இயேசுவின்) பெயரால் நீங்கள் எதைக்கேட்டாலும், அதை நான் செய்வேன்'' (அரு 14:14)

**(கத்தோலிக்க வேதாகமத்திலிருந்து...)**

## பாதுகாத்துக் கொள்ளும்!

**''இதோ, என்னைக் காக்கிற இயேசு உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை'' (சங் 121:4)**

※ ''இயேசு என்னோடே இருந்து, நான் போகிற இடத்திலெல்லாம் என்னைக் காப்பார்'' (ஆதி 28:15)

※ ''தீங்கு நாளில் இயேசு... என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார்'' (சங் 27:5)

※ ''இயேசு எனக்கு மறைவிடமாயிருக்கிறார்; அவர் என்னை இக்கட்டுக்கு விலக்கிக் காப்பார்'' (சங் 32:7)

※ ''இயேசு என்னைப் பாதுகாத்து என்னை உயிரோடே வைப்பார்; பூமியில் நான் பாக்கியவானாயிருப்பேன்''(சங் 41:2)

※ ''இயேசு என் காலை தள்ளாடவொட்டார்; என்னைக் காக்கிற இயேசு உறங்கார்'' (சங் 121:3)

※ ''இயேசு என்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; இயேசு என் ஆத்துமாவைக் காப்பார்'' (சங் 121:7)

※ ''இயேசு என் போக்கையும் என் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார்'' (சங் 121:8)

※ ''இயேசு என் நன்மையாயிருந்து, என் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்'' (நீதி 3:26)

※ ''இயேசுவோ உண்மையுள்ளவர், அவர் என்னை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்'' (IIதெச 3:3)

※ ''இயேசு எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்'' (IIதீமோ 4:18)

**''உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்'' (சங் 91:1)**

## என்னுடைய விசுவாச அறிக்கை!

**''இயேசு எனக்காக யாவையும் செய்துமுடிப்பார்'' (சங் 138:8)**

⁕ ''இயேசு என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்'' (சங் 23:1)

⁕ ''நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்'' (சங் 23:4)

⁕ ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' (சங் 23:6)

⁕ ''இயேசு என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? இயேசு என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்?'' (சங் 27:1)

⁕ ''என் பக்கத்தில் ஆயிரம்பேரும், என் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது என்னை அணுகாது'' (சங் 91:7)



⁕ ''வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுவிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:2)

⁕ ''சமாதானத்தின் இயேசு சீக்கிரமாய்ச் சாத்தானை என் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோம 16:20)

⁕ ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி 4:13)

⁕ ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' (பிலி 4:19)

⁕ ''இயேசு எனக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (IIதீமோ 1:7)

⁕ ''உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலிருக்கிற இயேசு பெரியவர்'' (Iயோவா 4:4)

**''நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'' (யோவா 11:40)**

## ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள்!

**''இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்''**
**(ஆகா 2:19)**

※ ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாத மாய் இருப்பாய்'' (ஆதி 12:2)

※ ''நான் உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்'' (ஆதி 26:3)

※ ''கர்த்தர் உன் அப்பத்தையும் உன் தண் ணீரையும் ஆசீர்வதிப்பார்'' (யாத் 23:25)

※ ''நான் உண்டுபண்ணின எல்லா ஜாதி களைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும், கீர்த்தி யிலும் மகிமையிலும் உன்னைச் சிறந் திருக்கும்படி செய்வேன்'' (உபா 26:19)

※ ''நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர் வதிக்கப்பட்டிருப்பாய்'' (உபா 28:6)



※ ''கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்'' (உபா 28:8)

※ ''நீர் (கர்த்தர்) அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவன் சம்பத்து தேசத்தில் பெருகிற்று'' (யோபு 1:10)

※ ''தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக''(சங் 3:8)

※ ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மை யும் கிருபையும் என்னைத் தொடரும்'' (சங் 23:6)

※ ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடு கிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது'' (சங் 34:10)

※ ''செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்'' (சங் 112:2)

※ ''கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்'' (சங் 115:13)

※ ''ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன்; அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன்'' (சங் 132:15)

※ ''நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்''(நீதி 3:33)

※ ''செம்மையானவர்களுடைய ஆசீர்வாதத்தினால் பட்டணம் நிலைபெற்றோங்கும்'' (நீதி 11:11)

※ ''உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்'' (ஏசா 26:3).

※ ''நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்'' (ஏசா 58:11)



※ ''அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்'' (ஏசா 65:23)

※ ''ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப் பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்'' (எசே 34:24)

※ ''தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோம 8:28)

※ ''கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1:3)

※ ''கர்த்தாவே நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்'' (சங் 3:3)

**''இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்'' (எண் 24:1)**

## ஜெபம்!

(மத்தேயு 6:9-13)

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக! உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக!

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்! எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்!

எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே! ஆமென்!

## வாங்கி விட்டீர்களா?

**வேதாகமத்தில் வைத்து ஜெபிக்க...**
**சிறிய முழங்கால் யுத்தம் ஜெபக் கையேடுகள்!**

1. முழங்கால் யுத்தம் - துதி பலிகள் - ரூ. 10/-
2. முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை நேரம் - ரூ. 5/-
3. முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை வேளை (குடும்ப ஆசீர்வாதங்களுக்காக) - ரூ. 5/-
4. முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை வேளை (விடுதலைக்காக) - ரூ. 5/-

இந்த ஜெபக்கையேடுகள் மூலம் எளிய முறையில் பிரார்த்தனை செய்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து இரட்சிப்பையும், சமாதானத்தையும், விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளலாம்!

ஜெபவீரர்கள்... இந்த ஜெபக் கையேடுகளை வாங்கி மற்றவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து ஜெபிக்க வைக்கலாம்!

**காணிக்கை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்!**

5/-
PC4

## உங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்க...

உங்களுக்காக ஜெபிக்க நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்! உங்கள் ஜெபத்தேவைகளுக்காக கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்!

---

**24-மணி நேரமும்!**

**தொலைபேசியில் ஜெபிக்க...**

*04344 221616, 226363*

---

தொடர்பு முகவரி:


**முழங்கால் யுத்தம்**

46/AA, சாந்திநகர் மேற்கு
3-வது தெரு, ஓசூர் - 635 109.
Email: muzhangalyuttham@yahoo.com



Printers: New Shenbagam Offset Printers
Sivakasi. Ph: 04562 220432





EVANGELICAL LITERATURE SERVICE
G-4, Ground Floor, Ashoka Enclave
No. 12, Netaji Road, Frazer Town,
BANGALORE - 560 005
Ph : 25473388, 25478833